# கவிதைப் போட்டி 8

## நாளைய தலைமுறையின் இன்றைய கனவு (2)

கலாமின் வல்லரசுக் கனவினை
வலிய என் இளமையினால் வென்றிட கனா காண்கிறேன்!
காமராசரின் கல்விக் கனவினை கடையெல்லைவரை கூட்டிச்சென்று
உச்சம் கண்டிட கனவு காண்கிறேன்!
அன்னை தெரசாவின் அன்புக் கனவினை அடையாளம் தெரியாத
மக்களுக்கும் மெய்யாக்கிட சொப்பணம் காண்கிறேன்!
அண்ணல் அம்பேத்காரின் சமத்துவக் கனவினை சமுத்திரங்கள்
தாண்டியும் நிலைநாட்டிட காட்சி காண்கிறேன்!

தமக்கை மலாலாவின் பெண்ணியக் கனவினை எல்லா
மாதர்க்கும் உரித்தாக்கிட கனா காண்கிறேன்!
நம்மாழ்வாரின் நலமிகு இயற்கைவனப்பு கனவினை நாளும்
இயற்கையோடு இணைந்து மெய்பித்திட கனவு காண்கிறேன்!

வள்ளுவரின் ஒப்பற்ற வாழ்வியல் கனவுகளை மூச்சென உள்வாங்கி
மனமுதிர்ச்சியுடன் வாழ்ந்திட சொப்பணம் காண்கிறேன்!
மண்டேலாவின் வேற்றுமை கலைந்திடும் கனவினை வண்ணங்களால்
அல்லாமல் எண்ணங்களால் அடைந்திட
நாளை என் வாழ்விற்காய் யான் கண்ட கனவிதுவே!
நலம்யாவும் பெற்றும் நாளையர் எமக்காய் எள்ளளவும் “ எள்ளளவும்
சிந்திக்காமல் சிதைக்கும் நீவீர்.......
என்றேனும் “எம் எதிர்காலம்” என்னாகுமென
எண்ணம் கொண்டீரோ!

*****************